## செய்தி வெளியீடு

# தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம், நகர் ஊரமைப்பு இயக்ககம் மற்றும் தமிழ்நாடு கூட்டுறவு வீட்டுவசதி இணையம் சார்பில் ரூ.183.60 கோடி செலவில் கட்டப்பட்டுள்ள கட்டடங்கள் - மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்தார்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் இன்று (10.4.2023) தலைமைச் செயலகத்தில், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறையின் கீழ் செயல்படும் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் சார்பில் 171 கோடியே 36 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள கட்டடங்கள், நகர் ஊரமைப்பு இயக்ககத்தின் சார்பில் 10 கோடியே 88 இலட்சத்து 80 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள கட்டடங்கள் மற்றும் தமிழ்நாடு கூட்டுறவு வீட்டுவசதி இணையத்தின் சார்பில் 1 கோடியே 35 இலட்சம் ரூபாய் செலவில் புதுப்பிக்கப்பட்ட மற்றும் நவீனமயமாக்கப்பட்ட கட்டடங்கள் ஆகியவற்றை திறந்து வைத்தார். மேலும், நகர் ஊரமைப்புத் துறையில் அளவர் / உதவி வரைவாளர் பணியிடத்திற்கு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் வாயிலாக தேர்வு செய்யப்பட்ட 48 நபர்களுக்கு பணிநியமன ஆணைகளை வழங்கினார்.

## தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம்

தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் சார்பில் திருநெல்வேலி மாவட்டம், பாளையக்கோட்டை வட்டம், அன்பு நகரில் 6 கோடியே 8 இலட்சம் ரூபாய் செலவிலும், தஞ்சாவூர் மாவட்டம், தஞ்சாவூர், நீலகிரி தெற்கு தோட்டத்தில் 4 கோடியே 48 இலட்சம் ரூபாய் செலவிலும், கிருஷ்ணகிரி மாவட்டம், ஒசூர் திட்டப் பகுதி - 3ல் 5 கோடியே 31 இலட்சம் ரூபாய் செலவிலும் கட்டப்பட்டுள்ள தமிழ்நாடு வீட்டுவசதி வாரிய பிரிவு அலுவலகக் கட்டடங்கள்;

தமிழ்நாடு அரசு அலுவலர் வாடகை குடியிருப்பு திட்டத்தின் கீழ், திண்டுக்கல் மாவட்டம், திண்டுக்கல் பேருந்து நிலைய காலனியில் தூண் மற்றும் ஆறு தளங்களுடன் 19 கோடியே 17 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 88 அடுக்குமாடி குடியிருப்புகள்; சென்னை, சைதாப்பேட்டையில் உள்ள தாடண்டர் நகரில் தூண் மற்றும் ஒன்பது தளங்களுடன் 108 கோடியே 47 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 504 அடுக்குமாடி குடியிருப்புகள்;

தேனி மாவட்டம் மற்றும் வட்டம், வீரபாண்டியில் 13 கோடியே 14 இலட்சம் ரூபாய் செலவில் தூண் மற்றும் இரண்டு தளங்களுடன் கட்டப்பட்டுள்ள சமுதாயக்கூடம், சென்னை, சாஸ்திரி நகரில் 14 கோடியே 71 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள வணிக மற்றும் அலுவலக வளாகம்;

என மொத்தம் 171 கோடியே 36 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள தமிழ்நாடு வீட்டுவசதி வாரியக் கட்டடங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.

**<u>நகர் ஊரமைப்பு இயக்ககம்</u>**

நகர் ஊரமைப்பு இயக்ககத்தின் சார்பில் ஈரோடு மாவட்டம் மற்றும் வட்டம், சம்பத் நகர் திட்டப்பகுதியில் 2 கோடியே 27 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள ஈரோடு மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகக் கட்டடம்;

சேலம் மாவட்டம், சேலம் வட்டம், தளவாய்பட்டி கிராமத்தில் 5 கோடியே 37 இலட்சத்து 25 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள சேலம் மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகக் கட்டடம்;

கோயம்புத்தூர் மாவட்டம், கோவை வடக்கு வட்டம், கணபதி கிராமத்தில் 3 கோடியே 24 இலட்சத்து 55 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள கோயம்புத்தூர் மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகக் கட்டடம்;

என மொத்தம் 10 கோடியே 88 இலட்சத்து 80 ஆயிரம் ரூபாய் செலவில் நகர் ஊரமைப்பு இயக்ககத்தின் சார்பில் கட்டப்பட்டுள்ள கட்டடங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.

அதனைத் தொடர்ந்து, நகர் ஊரமைப்புத் துறையில் அளவர் / உதவி வரைவாளர் பணியிடத்திற்கு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் வாயிலாக தேர்வு செய்யப்பட்ட 48 நபர்களுக்கு பணிநியமன ஆணைகளை வழங்கிடும் அடையாளமாக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 7 நபர்களுக்கு பணிநியமன ஆணைகளை வழங்கினார்.

**<u>தமிழ்நாடு கூட்டுறவு வீட்டுவசதி இணையம்</u>**

தமிழ்நாடு கூட்டுறவு வீட்டுவசதி இணையத்தின் செயல்பாடுகளை விரிவாக்கம் செய்யும் பொருட்டு மதுரையில் 30 இலட்சம் ரூபாய் செலவிலும், கோயம்புத்தூரில் 30 இலட்சம் ரூபாய் செலவிலும் புதுப்பிக்கப்பட்டுள்ள மண்டல அலுவலகக் கட்டடங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார். இம்மண்டல அலுவலகங்கள் கூட்டுறவு சங்கங்களுக்கு நிதி உதவி அளிக்கும் தலைமை நிறுவன இணையமாக செயல்படுகிறது. மேலும், உறுப்பினர்கள் எளிதாக கடன் பெறுவதற்கும், சங்கங்களின் தேவைகளை உடனுக்குடன் பூர்த்தி செய்வதற்கும், ஏழை எளியோர்கள் பயன்பெறும் வகையில் நகைக்கடன் மற்றும் வீட்டுவசதி கடன்களும் நேரடியாக வழங்கப்படும்.

மேலும், செங்கல்பட்டு மாவட்டம், சோழிங்கநல்லூர் வட்டம், மடிப்பாக்கத்தில் உள்ள கார்த்திகேயபுரம் கூட்டுறவு சங்கத்தின் சமுதாயநலக்கூடத்தில் 75 இலட்சம் ரூபாய் செலவில் மின்தூக்கி மற்றும் இதர வசதிகளுடன் நவீனமயமாக்கப்பட்ட கார்த்திகேயபுரம் கூட்டுறவு சங்க சமுதாயக்கூடத்தை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார். இதன்மூலம், சங்க உறுப்பினர்கள் தங்கள் இல்ல நிகழ்ச்சிகளை குறைந்த வாடகை கட்டணத்தில் நடத்திடவும், அப்பகுதி மக்களும், சங்க இணை உறுப்பினர்களும் நிகழ்ச்சிகளை நடத்தி பயன்பெறவும் வழிவகை ஏற்படும்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர் திரு. சு. முத்துசாமி, மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் திரு. மா. சுப்பிரமணியன், தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் தலைவர் திரு. பூச்சி எஸ். முருகன், தலைமைச் செயலாளர் முனைவர் வெ.இறையன்பு, இ.ஆ.ப., வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை முதன்மைச் செயலாளர் செல்வி அபூர்வா, இ.ஆ.ப., தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் மேலாண்மை இயக்குநர் திரு. எ. சரவணவேல்ராஜ், இ.ஆ.ப., நகர் ஊரமைப்பு இயக்ககத்தின் இயக்குநர் திரு. பா. கணேசன், இ.ஆ.ப., தமிழ்நாடு கூட்டுறவு வீட்டுவசதி சங்கங்களின் பதிவாளர் திரு. அ.த. பாஸ்கரன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

............

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in